# பல்லவபுரம் நகராட்சி

## நகராட்சி கூட்டப் பொருள் தீர்மான எண் 130, நாள் 28.02.2017
## நகராட்சி கூட்ட பொருள் தீர்மான எண் 185 நாள் 10.04.2017
## (ந.க.எண்.609/2017 நாள்.12.04.2017)
## திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016
## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)—இல் பிரிவு 3, 6 மற்றும் 25—களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—இன் விதி 4—இல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம் பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161—ன் படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய எற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல் சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடைசெய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைமுறைகளுக்குட்பட்ட, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் விதிகள் 2016—ன்படி நகர் மன்ற ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின் படி, பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைமுறைப்படுத்த வேண்டி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி பல்லவபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016ன் படி பல்லவபுரம் நகராட்சி துணை விதிகள் கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்படுகிறது.**

1. பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவு நீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக் கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.
2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை வெள்ளை நிறமுள்ள கூடையிலும், வீட்டு மருத்துவ கழிவுகள் மற்றும் உயிருக்கு ஊறு விலைவிக்கக் கூடிய கழிவுகளை கருப்பு நிற கூடையிலும், சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.
3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்படமாட்டாது.
4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.
6. மருத்துவமனை கழிவுகள், மருத்துவ ஆய்வுக்கூட கழிவுகள், கால்நடை மருந்து கழிவுகள், மற்றும் கால் நடை மனித உறுப்பு கழிவுகள் எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. இந்திய அரசின் 2016 ஆம் ஆண்டின் மருத்துவ கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் மருத்துவ ஆய்வுக்கூட கழிவுகள் பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.
7. தோட்டக் கழிவுகள் மற்றும் பண்ணை கழிவுகள் ஆகியவற்றை உருவாக்குவோர் / உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை, தெரு ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. கட்டிட இடிபாடுகளை கட்டட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக் கூடாது. அவ்வாறு போடுவது கட்டிட இடிபாடு கழிவுகள் மேலாண்மை விதி 2016ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும்.

9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் பொது இடம், தனியார் இடங்களில் எரிப்பது தண்டனை குற்றமாகும்.

10. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே அவற்றை பெற்றுச் செல்லும்.

11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக் கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் மற்றும் சாலையோர கடைகளில் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாகச் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும்.

12. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் உயிருக்கும், உடலுக்கும் கேடு விலைவிக்க கூடிய குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் மற்றும் நகராட்சி குப்பைகளுடன் கலந்து கொட்டக்கூடாது. மாறாக நச்சுக் கழிவுகள் கையாளுதல் மற்றும் மேலாண்மை விதி 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு நச்சு கழிவுகளை அப்புறப்படுத்திக் கொள்ளவேண்டும்.

13. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி அப்புறப்படுத்த வேண்டும்.

14. பாதசாரிகள் மற்றும் சாலை ஒரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஒரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.

15. செப்டிக் டேங்க் கழிவுகளை, கழிவு நீர் வாய்க்கால்களிலோ, அல்லது தெருக்களிலோ கொட்டக் கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. வீட்டுச் செல்லப் பிராணிகளை தெருவில் விட்டு அசுத்தம் செய்வது குற்றச் செயலாகும். உரிய கழிவு நீக்க நடவடிக்கைகள் அந்தந்த பிராணிகள் வளர்ப்பு நபரே செய்யவேண்டும். மீறினால் அபராதம் விதிக்கப்படும்.

17. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன்படி, பல்லவபுரம் நகராட்சி சுற்றுச் சூழலுக்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நீதிமன்றம் வாயிலாக நடவடிக்கை தொடரப்படும்.

18. துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள, செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக அட்டவனை IV –இல் கண்டவாறு அபராதம் வசூலிக்கப்படும்.

19. தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100– வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்

20. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி மன்றத்தினரால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

21. பொது இடங்களில் 100 பேருக்கு மேல் கூடும் நிகழ்ச்சி ஏற்பாடு மேற்கொள்ள மூன்று வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் நகராட்சியில் அனுமதி பெற வேண்டும். மேலும் நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பையினை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும். அல்லது உரிய சேவைக் கட்டணம் செலுத்தி நகராட்சி வாகனம் மூலம் அகற்றிட வேண்டும்.

22. நாள் ஒன்றிற்கு 100 கிலோ அல்லது அதற்கும் மேல் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்கள், 5000 சதுரமீட்டருக்கு மேல் பரப்பளவு கொண்ட குடியிருப்புவளாகங்கள் மற்றும் அனைத்து விதமான நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைளை தரம் பிரித்து மறு சுழற்ச்சிக்கு தகுதியான குப்பைகளை நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் / மறு சுழற்சி செய்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மக்கும் குப்பைகளை அந்தந்த நிறுவனங்களே தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி கழிவுகளின் தன்மை மற்றும் அளவிற்கேற்ப சரியான ஏற்புடைய நிலைத்து நீடித்து செயல்படுத்த தக்க வகையில் உரமாகவோ (composting) உயிரி எரிவாயுவாகவோ (Bio-methanation) மாற்றி அப்புறப்படுத்த தேவையான கட்டமைப்பு வசதிகளை இயன்றளவு ஏற்படுத்த வேண்டும்.

**23. சுற்றுப்புறத்தினை அசுத்தம் செய்பவர்கள் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட அபராத தொகையினை அட்டவணை IVல் கண்டவாறு கட்டத்தவறினால் தவறு இழைப்பவர்கள் மீது நகர காவல் சட்டம் / மாவட்ட காவல் சட்டம் / இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் வழக்கு தொடர நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.**

**திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண் 4(3)ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி குப்பை தொட்டிகளில் சேகரிக்க / நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த சேவைக்கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது**

## அட்டவனை–I

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. குடியிருப்பு | | | |
| i) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 30.00 |
| ii) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.501–1000 க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 40.00 |
| iii) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001–2000 க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| iv) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | மாதம் ஒன்றுக்கு | 60.00 |
| 2. நிறுவனம் | | | |
| i) | தனியார் பள்ளி/கல்லூாரி விடுதி/தனியார் அலுவலக வளாகம். | மாதம் ஒன்றுக்கு | 2000.00 |
| ii) | மருத்துவமனை(படுக்கையுடன்) | மாதம் ஒன்றுக்கு | 50 படுக்கைகள் வரை / 50 படுக்கைகள் மேல் 3000 / 10000 |
| iii) | கிளினிக் | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 3. வணிகம் | | | |
| i) | டீ ஸ்டால் / சிற்றுண்டி | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| ii) | நடமாடும் உணவகம் | நாள் ஒன்றுக்கு | 100.00 |
| iii) | உணவகம் சிறியது | மாதம் ஒன்றுக்கு | 3000.00 |
| iv) | உணவகம் பெரியது | மாதம் ஒன்றுக்கு | 5000.00 |
| v) | வணிகவளாகம் | நாள் ஒன்றுக்கு | சிறியது / பெரியது 1000 / 2000 |
| vi) | திருமணமண்டபம் சிறியது | நிகழ்வு ஒன்றுக்கு | 1500.00 |
| vii) | திருமணமண்டபம் பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 3000.00 |
| viii) | சிறிய மீன்/மட்டன் ஸ்டால் / சிக்கன் ஸ்டால் | மாதம் ஒன்றுக்கு | சிறியது / பெரியது 500 / 1500 |
| ix) | பலசரக்கு கடை மற்றும் இதர பல்பொருள் அங்காடி | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| x) | சினிமா தியேட்டர் மற்றும் பொழுதுபோக்கு மையம் | மாதம் ஒன்றுக்கு | 3000.00 |
| xi) | காய்கறிகள்வியாபாரம் | நாள் ஒன்றுக்கு | 150.00 |
| xii) | டெக்ஸ்டைல்ஸ் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | சிறியது / பெரியது 3000 / 5000 |
| xiii) | தோல் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு | 3000.00 |

| | | | |
|---|---|---|---|
| | | ஒன்றுக்கு | |
| xiv) | அனைத்து சிறு தொழில் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 3000.00 |
| xv) | இருசக்கர வாகன ஒர்க் ஷாப் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| xvi) | நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் ஒர்க் ஷாப் | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| xvii) | ஓடுகள், பளிங்கு கற்கள் போன்றவை விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| xviii) | மரச்சாமான்கள் மற்றும் டிம்பர்ஸ் | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| xix) | பழைய சாமான்கள் சேகரித்தல் | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| xx) | அச்சகங்கள் மற்றும் காகிதப் பொருட்கள் விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| xxi) | தகரம் மற்றும் பெயிண்ட் விற்பனை(Hardwares) | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| | | | |
| 4. மற்றவை | | | |
| அ | மரக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| ஆ | தோட்டக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| இ | கட்டடக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000.00 |

**<u>குறிப்பு</u>**

i. **பல்லவபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளில் அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளவாறு வரிசை எண் I முதல் IV வரை உள்ள தற்போதைய இனங்களுக்கு குப்பை உற்பத்தியாளருக்கும் சேவைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஏற்படுத்தக் கூடிய புதிய இனங்கள் மூலம் குப்பை உற்பத்தி செய்பவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகளில் தெரிவித்துள்ள விவரப்படி அவ்வப்போது தேவைக்கேற்ப நகரமன்ற ஒப்புதலின் அடிப்படையில் உரிய துணை விதிகள் ஏற்படுத்தப்படும்.**

ii. **மேற்கண்ட அட்டவணை I ல் குறிப்பிட்டுள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ஆண்டுக்கு ஒரு முறை 10 சதவீதம் உயர்த்தி வசூலிக்கப்படும்.**

# அட்டவனை–II

## மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்கப்பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
|---|---|
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும். இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒருவகை கழிவாகும். | மறு சுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருட்களாக மாற்ற முடியும். புதிய அப்பொருட்கள் அசல் பொருட்கள் போல இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். |
| • டீ இலைகள், முட்டை ஓடுகள், பழம், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்படாதென விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக்குப்பை<br>• விலங்கு குப்பை<br>• பழுதடைந்த காகிதம்<br>• தேங்காய் ஓடு<br>• சாம்பல் | • செய்திதாள்கள்<br>• தாள், புத்தகம் மற்றும் இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள், கம்பி<br>• நெகிழி (Plastic)<br>• கந்தல் துணி<br>• தோல்<br>• ரெக்சின் (rexine)<br>• தொய்வை ( rubber)<br>• மரம் / அறைகலன்<br>• மூட்டை கட்டல் |

# <u>அட்டவணை–III</u>

## வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்

- ஏரோசல் டப்பா (Aerosol cans)
- மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்.
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும், வடிகாலையும் தூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள், வேதிய பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒப்பனை பொருட்கள் இராசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப் பொருட்கள் (lubricants) வஜ்ரபசைகள் (glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்
- புகைப்பட ஆடியோ / வீடியோ நாடாக்கள் ( Tabers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- இராசாயனப் பொருட்கள் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களை சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள்
- மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்.
- தனியாள் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், கனிப்புப்பொறி, ஜி.பி.எஸ் (GPS) தானியங்கி மின்னணு, டிஜிட்டல் படி பெட்டிகள், தானாக ஒளியை இயக்கும் கருவிகளும் மற்றும் டிவிடி (DVD)கள், வி.சி.ஆர் (VCR) கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப்பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.

# <u>அட்டவனை–IV</u>

## அபராதப் பட்டியல்

| வ.எண். | துணை விதிகள் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பொது, தனியார் இடங்களில், பொது கால்வாய்களில், குடியிருப்பு / வணிக இடங்களில் இருந்து குப்பைகளை எறிதல். | 200 |
| 2 | **திடக்கழிவுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை** | |
| | அ) குடியிருப்புகள் | 100 |
| | ஆ)அடுக்குமாடி குடியிருப்புகள் /காலணிகள் | 500 |
| | இ) அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Generators) | 1000 |
| 3) | கட்டுமான கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை | 5000 |
| 4) | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | 500 |
| 5) | குப்பை தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பை கொட்டுதல் | 1000 |
| 6) | **கழிவுகளை எரித்தல்** | |
| | அ) தனியார் தன் வளாகத்திற்குள் | 200 |
| | ஆ) தனியார் பொது இடத்தில் | 500 |
| | இ) நிறுவனங்கள் , வணிக நிறுவனம் | 1000 |
| 7) | மீன், வளர்ப்பு பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருங்கு சேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல் | 500 |
| 8) | கொள்கலம் / குப்பைக்கூடை இல்லாத விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 100 |
| 9) | குறிப்பிட்ட வகையில் கழிவை பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 500 |
| 10) | பொதுக்கூட்டம் / நிகழ்ச்சிக்கு பின் தூய்மை வைப்புத் தொகை 24 மணி நேரத்திற்குள் பறிமுதல் ஆவதுடன் அபராதம் தூய்மைப்படுத்தாமல் இருப்பதற்கு | 1000 |
| 11) | பொது இடங்களில் செல்லப் பிராணிகளால் அசுத்தம் செய்வதை சம்மந்தப்பட்ட உரிமையாளர் சுத்தம் செய்ய வேண்டும், தவறினால் அபராதம் | 100 |
| 12) | மருத்துவ கழிவுகளை நகராட்சி குப்பைகளில் கலந்து கொட்டுதல் | 2000 |

| | | |
|---|---|---|
| 13) | தோல் நிறுவனங்கள், கால்நடை வளர்ப்பு கூடங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்களிலிருந்து வெளியோறும் கழிவு நீரை (Screening / Diapharm Chamber) சுத்தம் செய்யாமல் பொது கால்வாய் / பாதாள சாக்கடையில் வெளியேற்றுவது | 2000 |

<u>குறிப்பு</u>

**i.** **பல்லவபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளை மீறுபவர்கள் அட்டவணை IVல் குறிப்பிட்டுள்ளவாறு வரிசை எண் 1 முதல் 13 வரை பட்டியலிடப்பட்டு அபராதத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகளில் தெரிவித்துள்ள விபரப்படி அவ்வப்போது தேவைக்கேற்ப நகரமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய துணை விதிகள் ஏற்படுத்தப்படும்.**

ii. **மேற்கண்ட அட்டவணை I ல் குறிப்பிட்டுள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ஆண்டுக்கு ஒரு முறை 10 சதவீதம் உயர்த்தி வசூலிக்கப்படும்.**

**ந.க.எண் 609/2017/எச்1**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பல்லவபுரம் நகராட்சி.